THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, the 2nd July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCE TO Dr. B. C. ROY AND SRI PURUSHOTHAMDAS TANDON.

MR. SPEAKER: I regret to announce the death of Dr. B. C. Roy, Chief Minister of West Bengal yesterday afternoon. He was one of the top-ranking politicians of the country, a great Chief Minister and also an eminent physician. On behalf of the House I will convey its deep sense of sorrow to the people of West Bengal.

I regret also to announce the death of Sri Purushothamdas Tandon. He also was a great leader. He was the Speaker of the Uttar Pradesh Legislative Assembly. On behalf of the House, I will convey its deep sense of sorrow to the family of Sri Tandon.

As a mark of respect to the departed souls, I request hon. Members to stand in silence for a minute.

The House stood in silence for a minute.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: Questions Nos. 70, 74, 78, 82, 83, 84, 85 and 86-A have been postponed at the request of the concerned Ministers.

அரசாங்கக் கல்லூரி (திருவண்ணாமலை)

*6. கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ல் திருவண்ணாமலையில் சர்க்கார் துறையில் ஒரு கல்லூரி திறக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

திரு. ஏ. ஆறுமுகம்: ஸார், திருவண்ணாமலையிலும், அதன் சுற்றுப்புறத்தில் உள்ள தாலூக்காக்களிலும் அநேக உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள காரணத்தினாலே, அங்கே ஒரு கல்லூரி இருக்க வேண்டியது அத்தியாவசியம் என்று கருதுகிறேன். அதற்காக அங்கே அரசாங்கம் ஒரு கல்லூரியை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

[2nd July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அங்கு ஒரு கல்லூரி இருப்பது அவசியம் என்பதை நான் மறுக்கவில்லை. தனிப்பட்டவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டால், அதற்கு அரசாங்கம் வேண்டிய உதவியை அளிக்கலாம்.

திரு. ம. கமலநாதன்: பிரிக்கப்பட இருக்கும் சேலம் மாவட்டத்திலே கிருஷ்ணகிரி தலைநகராக அமையப் போகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நகரத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்லூரி துவங்கப்படுமென்று, அதற்கு கால்கோள் விழாகூட நடத்தி விட்டார்கள். ஆனால் இன்னும் அதைப்பற்றி எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. கிருஷ்ணகிரி தலைநகராகப் போவதைக் கருதி, உடனடியாக அங்கு கல்லூரி ஏற்படுத்த அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கிருஷ்ணகிரியில் கல்லூரி அமைக்கப்படும் விஷயத்தைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால், நான் விவரமாக பதில் அளிக்கிறேன்.

The Madras Universityy Act

* 68 *Q*.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received a resolution passed by the Senate of the University of Madras, recommending that the University Act should be revised; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: ஸார், யுனிவர்சிடியிலிருந்து அரசாங்கத்திற்கு வருவதற்கு காலதாமதமாகலாம். அவர்களுடைய நடவடிக்கைகளை பார்க்கிறபோது, அந்தமாதிரி அபிப்பிராயம் அதாவது சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் யுனிவர்சிடிக்கும் இருக்கிறது. இதற்கு முன்பு பல முறை அரசாங்கத்தினரும் கூறி வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யுனிவர்சிடியார் கூறாவிட்டாலும், அரசாங்கம் தாங்களாகவே சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பல்கலைக்கழக சம்பந்தப்பட்ட சட்டத்தை எவ்வாறாயினும் திருத்த வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்தில் இருந்து வருகிறது. அப்படித் திருத்துவதைப் பற்றி ஒரு குழு பரிசீலனை செய்து இருக்கிறது. அந்தக் குழு சிபார்சு செய்ததை, இப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.